உ

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

புலோலிப்

பசுபதீசுரரந்தாதி.

ஆக்கியோன்:

யாழ்ப்பாணம் புலோலி

ஆரியதிராவிட மஹாபண்டிதர்

பிரம்ஸ்ரீ. ம. முத்துக்குமாரசுவாமிக்குருக்கள்.

சரஸ்வதியந்திரசாலை,

பருத்தித்துறை.

விலை சதம் 10.

1952

உ

சிவமயம்.

புலோலிப்

பசுபதீசுராந்தாதி.

இது

ஆரியதிராவிட மஹாபண்டிதர்

பிரமஸ்ரீ. ம. முத்துக்குமாரசுவாமிக் குருக்கள்

அவர்கள்

அக்கோயிலர்ச்சகாசாரியாராயிருந்தகாலத்து

இயற்றியது.

ஷெகுருக்களனுமதிப்படி,

மாணாக்கர்

த. காசிநாதசர்மா அவர்களால்

பருத்தித்துறை

சரஸ்வதியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

ஆங்கீரஸளு வைகாசிமீ.

1932

உ

கணாதிபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

A. ALAGACONE
HUSKISION STREET
TRINCOMALEE

புலோலிப்

பசுபதீசுராந்தாதி.

காப்பு.

கலித்துறை.

சீர்மேவு செல்வ வளமார் புலோலித் திருநகரிற்
பேர்மேவு தெய்வப் பசுபதி யீசர் பெரும்புகழி
னோர்மேவு செந்தமி ழந்தாதி யானிங் கிசைப்பதற்குக்
கார்மேவு கும்பக் கயமா முகவன் கழறுணையே.

நூல்.

திருவளர் மார்பன் முதலினர் யாவருஞ் சீர்புகழக்
கருவளர் பல்லுயி ருய்வான் கருதிக் கவுரியுடன்
குருவளர் தெய்வப் பசுபதி நாதர் குலாவுமிடம்
மருவளர் பூம்பொழில் சூழும் புலோலி வளநகரே. (௧)

நகரம் பலவுள நாடெங்கு மாயினு நல்லிமையச்
சிகரம் பயந்தருள் செல்விமுன் னேன்வில்லி சேய்முதலோர்
நிகரம் விரவப் பசுபதி நாதர் நிறையருளம்
பகரங் கமர்ந்த புலோலி நகர்க்கிணை பாடரிதே. (௨)

பாடளி யோங்கு மலர்த்தடம் பூம்பொழில் பாங்குசெறி
நீடளி யோங்கு புலோலியம் பொற்பதி நித்தநிறை
வீடளி யோங்குறு செல்வ மளியென விண்ணவருந்
தேடளி யோங்கு பசுபதிக் கேற்குந் திருப்பதியே. (௩)

பதிநீ யருமைக் குருநீ பயந்த பகவனுநீ
நிதிநீ சனனியுஞ் சுற்றமு நீநன் னிலையுயிர்நீ
மதிநீ யணிகொள் புலோலிப் பசுபதி வள்ளலருட்
கதிநீ யருளுகண் டாய்தமி யேற்குன் கழறுணையே. (௪)

துணையாம் புலோலிப் பசுபதி யீசற் றொழாதவர்போற்
பிணையாகி யையுற னெஞ்சே யிவரைப் பிறழ்வனகண்
ணிணையா மதுகரம் பாடலர் வாடுறு மச்சமுமா
மிணையாம் பிடிநடை கைவினை யான வெழிலணிக்கே. (௫)

அணிந்தா ரரவம் பிறைகங்கை யத்தி யயன்சிரமே
பணிந்தார் பவங்கள் படுப்பார் புலோலிப் பசுபதியார்
துணிந்தா ரிடர்செயுந் துட்டரை யோட்டித் துயர்களையாத்
திணிந்தா ரிருண்மனத் தென்னையுந் தேற்றித் திருத்துவரே. (௬)

திருத்திய பல்வள மன்னும் புலோலிச் செழுநகர்மே
லருத்திய ராகும் பசுபதி யீச ரடியிணைகள்
கருத்தின வாயுறிற் காலன்வந் தாலென் கருதலர்தா
முருத்திடி லென்பிணி யுற்றாலெ னொற்க முறினுமென்னே. (௭)

என்னை யுரைப்ப தெழிலார் புலோலியி னெம்பெருமான்
பொன்னே ருருவப் பசுபதி யாரருள் போலுமிவ
டன்னேர் முகங்கண்டு தாமரை நாணித் தடம்புனல்சார்ந்
தெந்நே ரழுந்தவ மாற்றியு நேரெழி லேற்றிலதே. (௮)

ஏற்றார் பலியென் பணியணிந் தார்நல் லிமயமங்கை
கூற்றார் குறட்படை யாரன்பர் மேல்வரு கூற்றுதைத்தார்
மாற்றார் புரங்க ளெரித்தார் மறையவன் மாற்கரியார்
மேற்றான மேத்து புலோலிப் பசுபதி மெய்யரன்றே. (௯)

அன்றா னிழலமர்ந் தற்றமி னற்றவர்க் காங்கருள்செய்
குன்றா மொழியுப தேசங் குணமில் கொடுவினையேற்
கென்றா தரவுட னீந்தருள் செய்தி யிறையவனே
மன்றார் புலோலிப் பதிவாழ் பசுபதி மாநிதியே. (௧௦)

மானாடு மற்றை மலரய னாடுமவ் வாசவனார்
வானாடு மற்றையர் நாடுமொன் றோவென மண்ணுலகிற்
றேனாடு சோலைப் புலோலிப் பசுபதி தேவரன்ப
ரூனா டுடவினி யெய்தா வுயரரு ளெய்துவரே. (௧௧)

எய்தரு பொன்மலை யேற்றவில் லாகவங் கேவுகணை
பைதருஞ் சேக்கைய னாகப் புரமடு பண்ணவனை
மெய்தரு சீர்த்திப் புலோலிப் பசுபதி மேலவனைப்
பொய்தரு மூழுஞ்ச வென்னாவெந் நாளும் புகலுறுமே (௧௨)

உறுவார்க் கெளிவந் தவொண்ணி யாங்குத வுத்தமரைச்
செறுவார் புலோலிப் பசுபதி யீசரைச் சிந்தையுளே
நிறுவா வழிபடு நீரான் றேவிய னீடுலகிற்
றுறுவார் பெருநலந் துய்ப்பவர் காணுந் துணிபிதுவே. (க௩)

இதுவே யமைய மிதுவே யமைய மிறையவனார்
மதுவேய் பொழில்கொள் புலோலிப் பசுபதி வள்ளலிவ
ணெதுவேண்டு மென்னினு மீந்தருள் கின்றன ரேழைநெஞ்சே
பொதுவே யுழலுடல் போதுமு னேத்திப் புகழ்ந்திறைஞ்சே. (க௪)

புகழாத வாயு நினையாத நெஞ்சும் புகுந்திறைஞ்ச
நிகழாத சென்னியு நேடித் தொழாத நெடுங்கரமுந்
திகழா தரத்தெதிர் காணுக கண்ணுஞ் சிறந்துமென்று
மிகழாத செல்வப் புலோலிப் பசுபதி யீசரையே. (க௫)

சரையா ருடனிலை யென்றே பசுபதி தாளிணைக
டரையார் புலோலிப் பதிசார்ந் திறைஞ்சலர் தங்களைப்போற்
கரையா தொழிமனங் கட்டுரை கூறினர் காதலர்தாம்
வரையார் மறந்தங் குறையார் விரைய வருகுவரே. (க௬)

குவலய மேசெய்த புண்ணிய மேதுசொல் கோதினெஞ்சே
தவலரு நாலு மறைக்குமெட் டாத தனிமுதலை
நுவலருஞ் செல்வப் புலோலி யிறைவரை நோற்பவர்தங்
கவலகந் தீர்க்கும் பசுபதி யீசரைக் கண்டிடவே. (க௭)

கண்டே யனைய மொழியுமை பங்கர் கருவுருவ
விண்டே யயனை யிடம்வலம் வைத்தவர் வீறுபுகழ்
வண்டேய் மலர்ப்பொழில் வண்மைப் புலோலிதம் வாழ்பதியாக்
கொண்டே யருள்வர் பசுபதி யீசர் குறையறவே. (க௮)

அறவோர் தமக்கிடர் செய்தகைம் மாவன் றடர்த்துரித்த
மறவோர் புலோலிப் பசுபதி யீசர் மலரருள்போ
னறவே ரலர்க்குழ லாயக்கு ழாத்தா ணடத்தல்கண்டா
முறவோ வரிதென்ன மாயங்கொ லோவிவ ணுற்றதுவே. (க௯)

உற்றவர் யாரினி யோங்கன் மடந்தை யுமைதலைவா
நற்றவர் மேவு புலோலிப் பதியி னயந்துறைவா
பற்றவர்க் குற்ற பசுபதி யேயரு ளார்கலியே
குற்றவல் லாரிரு ளோட்டியெற் கின்னருள் கூட்டுதியே. (௨0)

கூட்டமெல் லாமன்பர் கோகறு கூட்டங் குலாவுகின்ற
காட்டமெல் லாமின்ப வாரிபெய் நாட்ட நயப்புடனே
தேட்டமெல் லாநம் பசுபதி யாரருட் டேட்டமதே
வாட்டமெல் லாந்தடிந் தாளும் புலோலி வளர்பதிக்கே. (உக)

பதியங் கெவற்றினு மேலாம் புலோலிப் பதியமரு
மதியஞ் சடைமுடி வானோர்பி ரானை வணங்கினர்க்குக்
கதியங் கெவற்றினு மேலாங் கதியருள் கண்ணுதலைத்
துதியன்பி னோடு பசுபதித் தேவைத் தொழுதிநெஞ்சே. (உஉ)

நெஞ்சமு மஞ்சும் புலோலிப் பசுபதி நின்மலனார்
கஞ்சமு மஞ்சுங் கழலிணை காணுங் கதியிலர்போ
லஞ்சமு மஞ்ச நடைக்கஞ்ச மீர்ங்குழற் கம்புகழு
நஞ்சமு மஞ்சும் விழிக்கிவர் சால்பு நவிலரிதே. (உ௩)

அரிதா கியகல்வி செல்வ மொழுக்க மடக்கமன்பு
பெரிதா கியபுகழ் பேசரு நற்குணம் பெற்றுளாராற்
கரிதா மனத்தவர் காணாப் பசுபதி காட்சியுறீஇ
வரிதா மலர்ப்பொழில் சூழும் புலோலியில் வாழ்பவரே. (உச)

வாழ்வார் மறையவ ராங்கொரு சார்நல் வணிகர்பலர்
சூழ்வார் விருப்புட னாங்கொரு சார்பலர் துன்னியுளார்
தாழ்வார்வ தின்றுயர் வேளாள ரன்பாநட் டாவுமிருள்
போழ்வார் பசுபதி யெல்லார் புலோலிப் புதுநகர்க்கே. (உ௫)

புதுமலர் மேவெழிற் பொன்னனை யாளைப் புலவரெலா
மிதுமலர் கண்களெக் கெய்தா வமுதெனு மேந்திழையைப்
பொதுநட மாடு பசுபதி யீசர் புலோலியுறு
மதுநறுங் காவிடைக் கண்டா னெருநலின் வாய்ந்திடவே. (உ௬)

திடமேவு சிந்தைய ரேத்தும் பசுபதி தேவனுறை
தடமேவு செல்வப் புலோலிப் பதிவளஞ் சாற்றரிதாற்
படமேவு பஃறலை நாகம் பரிக்குமிப் பாருலகத்
திடமேவு மேன்மைக ளெல்லா மமைந்திங் கிசைந்தனவே. (உ௭)

இசையார் புலோலிப் பதியார் பசுபதி யெம்பெருமா
னசையா வழிபடு நல்லவர்க் காக்க நயந்தளிப்பான்
றிசையா மனைத்தினு மையம் புகுந்திறந் தீனமதோ
வசையா மிதென்று பழிப்பா ரிழிப்புறும் வண்ணமென்னே. ()

வண்ணந் தருந்திரு நீற்றொளி மேனிய வான்பொழில்க
டண்ணந் தருநற் புலோலியில் வாழ்வு தயங்குறுநல்
லெண்ணந் தருங்குண மேவும் பசுபதி யெற்கருள்வாய்
திண்ணந் தருங்கவி பாடுறு வன்மை திகம்பரனே. (௨௯)

கம்பார் தடங்கடல் சாரும் புலோலியைக் காதலித்தா
னம்பார் தருங்க ணுமைமேவு பாக னமரரிறை
வம்பா ரிதழி மதிமலர் வேணி மகேச்சுரனிங்
கெம்பார்வை காண்டக வுற்றான் பசுபதி யெம்மிறையே. (௩0)

இறைவா விமய மலைமகள் கோனடி யேத்தினர்க்கு
நிறைவாழ்வு முத்தி யளித்தரு ணீதழுந் நீரொழுந்த
கறைவா ளவிர்கள வஞ்சலென் றோர்மொழி காதலித்தேற்
கறைவாய் பசுபதி யப்பா புலோலி யமர்பவனே. (௩௧)

பவனம் புரையும் புலோலிப் பதியிற் பசுபதியார்
புவனந் தொழுதகு தாமரைப் பூவடி போற்றலர்போற்
கவனங்கொ ளாது புலம்பனெஞ் சேகதிர் கச்சளம்போற்
றவனந் தடியுந் துணைவனைச் சாரிற் றவிர்த்திடுமே. (௩௨)

தவிராத வின்ன றவிர்த்திடு வீர்திண்ணர் தந்தகசை
யவிராக மார்தர வார்ந்தங்க வர்க்கின்ப மார்த்தினியாற்
புவிராக மார்ந்த புலோலிப் பசுபதி புண்ணியரே
கவிரா ரிதழ்பங்க ரேதமி யேனைக் கடைக்கணித்தே. (௩௩)

கடைந்தார் கடலமு தன்றளித் தாரக் கரியவனு
ருடைந்தார் புகுந்த சுரர்க்குப் புலோலி யுறைபரனு
ரடைந்தார் தமக்குப் பசுபதி நாத ரருளமுத
மிடைந்தார் தரவென்று நன்றளிப் பார்செய்ய மேனியரே. (௩௪)

மேனில வார்தரு வேணிப் பசுபதி வீற்றிருக்கு
மாநில வாரும் புலோலி நகர்வளர் வண்பொழிற்பூந்
தேனில வாவி மதுகரம் பாடுந் திருந்திசையை
வானில வாவினர் வானவர் கேட்டு வருந்துவரே. (௩௫)

வருந்தும் பவங்கள் படுப்பார் பசுபதி வானவனூர்
பொருந்தும் புலோலி முதுநகர் வாழ்வுறு புண்ணியர்தா
மருந்துஞ் சுகாதி சயமா முதநன் கனுபவிப்பார்
மருந்துண்ட தேவர்க் கமுத ரெனும்பெயர் மாதிரமே. (௩௬)

நிரயா மலர்த்தட மொய்க்கும் புலோலித் திருநகரே
புரமாக மன்னு பசுபதி தேவரைப் போற்றலர்தாங்
கரமா ரமுதங் கமருகுத் தாங்கொன்று காதலிப்பார்
தரமாவ ரன்றியுந் தம்மையுந் தாழ்த்துத் தளர்குவரே. (௩௭)

தளர்ந்தனை நீவெற்ப தெய்வப் புலோலித் தருபதியிற்
கிளர்ந்த பசுபதி யெம்மா னருளிற் கிடைத்தமெய்ம்மான்
வளர்ந்த நகையுடன் மாதிர நோக்கி வழிதொடரா
வுளர்ந்தளி பாடு மலர்ப்பொழி லின்ற தொருதனியே. (௩௮)

தனியார் புலோலிப் பசுபதி நாதனைத் தங்களுளங்
கனியா வழிபடு நீரின் றயற்பொய்க் கணங்கடமை
நனியா தரிப்பவர் சைவமெய்ந் நூல்களை நன்றுணரி
னினியா ரிவரவ ரோவினி யாரென வேசுவரே. (௩௯)

ஏசுவர் போலும் புலோலிப் பசுபதி யெந்தைபுகழ்
கூசுவ தின்றிச் சிறிதே யுரைத்த குறையிதென்றே
பேசுவ தற்கிங் கடங்கா சிறிதிவண் பேசினால்
மாசுவர் மேலர்க்கு மேலோயி தேற்று மகிழ்ந்தருளே. (௪0)

அருளொன்று பேணி யனுதினம் போற்றவு மஞ்சலென்றே
மருளொன்று மென்றுயர் மாற்றுகி லீரயன் மாற்கரியீர்
பொருளொன்று விற்கைப் புலோலிப் பசுபதிப் போதகரே
தெருளொன்று சிந்தை யுறுமா றளியனைத் தேற்றுகவே. (௪௧)

தேற்றுவர் யாவர் புலோலிப் பசுபதித் தெய்வதமே
ஆற்றுவ ராலலர் துன்னார் துனியுந் தொடர்வுறுமாற்
கூற்றுவர் தாமுங் குறுகுவர் போலுங் குறித்திவற்றை
யாற்றுவ னேவடி யேனடி காளுன் னடைக்கலமே. (௪௨)

அடைக்கல மாவ தரனடி யேயென் றகந்துணிந்தேன்
றொடைக்கல மாகப் பணியணிந் தார்கம்பு தோடுகந்தார்
கடைக்கல மாகும் புலோலிப் பெரும்பதி காதலித்தார்
துடைக்கல ரோவிப் பசுபதி யாமென் றுயர்முற்றுமே. (௪௩)

முற்றும் பெருமை முதல்வா முனிவர்க்கு மோனமருள்
பற்றும் பிரான்பர மானந்த வாரி பராபரனே
எற்றுந் திரைக்கடல் சாரும் புலோலி யிறையவனே
சற்று மிரங்கலை யென்மேற் பசுபதி சங்கரனே. (௪௪)

சங்கார் தடஞ்சுனை சூழும் புலோலித் தகைப்பதிவாழ்
கங்கா தரநற் பசுபதி யாரருள் கண்டனைய
நங்காய் நகில்விம்ம நன்னுதல் வேர்ப்ப நழுவவளை
யெங்கார் தடம்பொய்கை செய்வது கூறிங் கிஃதெனக்கே. (சரு)

எனக்கார் நிகரென் றிறுமாந்த தக்க னியற்றுமகம்
நினக்கார்வ மில்குறை யாலே யழிவு நிகழ்ந்ததுதேர்ந்
துனக்காவ லோடு வழிபாடு செய்திட வுன்னினன்யான்
கனக்கார்ப் பொதும்பர்ப் புலோலிப் பசுபதி காத்தருளே. (சசு)

காத்தீ ரிமையவர் தம்மையஞ் ஞான்று கயமுரித்தே
போர்த்தீர் புலியதள் சுற்றினிர் மூன்று புரமெரித்தீர்
வேர்த்தீர் சலந்தரற் போழ்ந்தீ ரருளொனு மெய்யமுத
மார்த்தீர் புலோலிப் பசுபதி யீரிங் கடியனுக்கே. (சஎ)

அடியருக் காக்கமு மாசறு மோக்கமு மாங்கிசையும்
படியளித் தாளும் படியீர் புலோலிப் பசுபதியீர்
கொடியவக் காலன் குறுகுமக் காலங் குறுகிநின்று
முடியரு மேக்கந் தவிர்த்தஞ்ச லென்று மொழிந்தருளே. (சஅ)

மொழியாங் குயிலியன் மஞ்ஞை கமல முகமதியாம்
விழியாங் கருவிள மங்கைசெங் காந்தள் விரும்புமுலை
பழியாத செவ்விள நீரிடை வானம் பசுபதியார்
கழியா தரங்கொள் புலோலிப் பொழிலிடங் காரிகைக்கே. (சகூ)

காரியல் கூந்தன் மலைமகள் கோனைக் கருதினர்க்கு
நேரிய னின்று நினைத்தாங் கருள்புரி நேயனைவெம்
போரிய லேறங் குலைத்தானை யேதில் புலோலிநகர்ச்
சீரிய தெய்வப் பசுபதி யைத்துணை தேடுநெஞ்சே. (ருo)

தேடுவ துய்யும் வகைசிவ னூலிற் றெளிந்தபொருள்
பாடுவ திங்கிவன் பல்புகழ்ப் பாடல் பணிந்துவர
நாடுவ திந்தப் புலோலிப் பசுபதி நாதனையே
வாடுவ தின்றி வழுத்துவ திந்த வரதனையே. (ருக)

வரதா வராக னறியா மலர்ப்பத வான்சுரர்க்குஞ்
சுரதா பமாற்ற வழுதிக்கொ ரன்பனைத் தூண்டியதா
பரதா பரைய வுடையாய் புலோலிப் பசுபதியே
விரதாக மேவிய பேதையென் பேரிடர் தீர்த்தருளே. (ருஉ)

தீர்த்தர் சிதம்பர நற்றிருத் தாண்டவச் சேவடியர்
வார்த்தன பார மலைமங்கை பங்கர் மறைமுதலோ
ரார்த்த பிறவித் துயர்கெடுத் தன்பரை யாண்டருள்வர்
சீர்த்த புலோலிப் பசுபதி யாரருட் சிந்தையரே. (௫௩)

சிந்தையில் வேண்டுவ யாவு மலிந்துள சீர்த்திருவு
முந்தைய நாமக டானு முறுவர் முதிரன்பினு
னிந்தையி ருன தருமங்கள் செய்யு நிதியருளர்
தந்தை பசுபதி சாரும் புலோலித் தகைப்பதிக்கே. (௫௪)

தகையான தாதர் தளர்வங் ககலத் தலையளியாற்
பகையான காலனைப் பாதத் துதைத்த பரம்பொருளே
தொகையான தேவர் தொழுதிடுந் தூய சுடர்க்கொழுந்தே
வகையார் புலோலிப் பசுபதி தேவ வழங்கருளே. (௫௫)

வழங்காத வித்தர்க்கு வான்கவி கோடி வழங்குவதின்
முழங்கார் கலியுல குய்ய முன்னுட்கொண் முழுதருளாற்
பழங்கா ருறைபொழிற் செல்வப் புலோலிப் பசுபதிமேற்
புழங்கார்வ நெஞ்சங் கசிந்தாங் கொருசொற் புகறனன்றே. (௫௬)

புகழ்வேன் புலோலிப் பசுபதி யார்தமைப் போற்றுகிற்பே
னகழ்வேன நாடு மரவிந்தச் சேவடி யார்வமுற்றே
னிகழ்வேன னீக்கியெற் கின்னருள் செய்குதி நேசமொழித்
திகழ்வே நவின்றிடு மொல்லார் கணங்க ளிரங்கிடவே. (௫௭)

இரங்கேல் புலோலிப் பசுபதி யானை யிறைஞ்சலர்போற்
சரங்கேழ் நவிர்விழிச் சந்தன மென்முலைத் தையனல்லா
ளுரங்கேழில் சேடியர் யாரினு மென்னை யுகந்துகொண்டாள்
வரங்கேட் பதற்கிது வாய்த்ததொர் காலம் வரையிறையே. (௫௮)

வரைபொரு தோளி யுமைபங்கர் வெள்ளி வரையுறைவார்
கரைபொரு வாரி கஞலும் புலோலி கஞலவந்தார்
நரைபொரு நந்தி யுகைத்தவர் நந்தியெ ளுமழுளா
ருரைபொரு மேனிப் பசுபதி யாருரைக் கொப்பிலரே. (௫௯)

ஒப்போ தரிய பசுபதி யாரரு ளோங்கியுறை
வைப்போத வாரி புடைசார் புலோலி வரையணங்கே
செப்போத வந்த முலைவிலை கொண்கர் சிறந்தளித்தார்
மைப்போ தனையகண் ணுய்வருந் தேலுன் மனங்கரைந்தே. ()

மனமுரு கன்பி னெனக்கருட் செல்வம் வழங்குயர்சிற்
கனமுரு கன்றந்தை காலற்குக் காலை கடிவிடபோ
சனமுரு கங்கலர் கூந்தல்பங் காமுகில் சாருநந்த
வனமுரு கந்தில் புலோலிப் பசுபதி மன்னவனே. (௯௧)

மன்னுத பாவ வுடனிலை யென்றுகொன் மண்ணுலகி
லுன்னுத பாவக வேடங்கள் பூண்ப ருயிர்க்குயிரைப்
பன்னுத பாவர்க் கணுகாப் புலோலிப் பசுபதியை
முன்னுத பாவ மொழிவார் முயங்கிருண் முட்டுவரே. (௯௨)

முட்டா வலியர் முழுமகர் தீயவர் முப்புரஞ்சுட்
டெட்டா வலிய திசையெங் கணும்புக ழெய்தியுளாய்
பிட்டா வலியவி கொண்டடி யேற்ற பெருமையனே
தட்டா வலிய புலோலிப் பசுபதி தாவரமே. (௯௩)

தாவர சங்கம வாருயிர்க் காருயிர் தாட்கமலப்
பூவர சங்கம நீய மொழியுமை பொற்பதியே
நாவர சங்க மலர்கவி மாலை நயந்தவநீ
காவர சங்க புலோலிப் பசுபதி காரணனே, (௯௪)

காரண வோங்கலிற் காவக மோடுங் கதிர்மறிக்கும்
பாரண வோங்கற் புலோலிப் பதிவாழ் பசுபதியே
வாரண வோங்கலவ் வானோர்க் கிடர்செய வந்துரித்த
மாரண வோங்கற் கயிலைப் பதிநல்கு மல்கருளே. (௯௫)

பல்கா தாமுற மன்றுடு மம்பல வாரணனையென்
பல்கா தரமற மன்னும் புலோலிப் பதியுறையுந்
தொல்கா தாவங் குழைநேர் பசுபதித் தோன்றலைநீ
சொல்கா தாமுற னெஞ்சே தொழுதி துயரறுமே. (௯௬)

துயர்தீர வெண்ணிப் புலோலியில் வாழுஞ் சுடர்க்கொழுந்தைப்
புயல்போ லருள்பொழி வள்ளற் பசுபதிப் பூரணனை
மயல்தீர வுள்ளத்து முன்னினும் வாயின் வழுத்திடினும்
வியர்வேற மெய்யின் வணங்கினும் பாச விலங்கறுமே. (௯௭)

விலங்குறு காகலை மேற்றலை நாட விரும்பியென்னே
புலங்குறு கானம் புகுந்தே தவங்கள் புரிந்துமென்னே
சலங்குறு காநல் விரதம் பலவா சரித்துமென்னே
பலங்குறு காநற் புலோலிப் பசுபதிப் பற்றிலர்க்கே. (௯௮)

பற்றார் திரிபுரந் தீப்பற்ற வித்த பராமரராய்
பொற்றார் திரிபுர வேறுகந் தாரும் போதவிளக்
குற்றார் திரிபுர மாகும் புலோலி யுவந்துறைவார்
ஒற்றார் திரிபுர மேவார் பசுபதி யுத்தமரே. (௬௯)

உத்தம வித்தக நற்றொண்ட ருய்யழ னோர்சுதனைச்
சித்தம வித்த கறியா வுகந்தவ செஞ்சடரே
புத்தம வித்த கனிபோற்று மேல புலோலிநகர்ச்
சத்தம வித்தக தேவா பசுபதி சற்றருளே. (௭௦)

சற்றும் பரிவுறல் பொல்லா வழிக்குத் தகையணங்கே
சுற்றும் பரிய வதளார் சுரர்க்குந் துணிவரியார்
பற்றும் பரிவுறு பண்பார் புலோலிப் பசுபதியார்
முற்றும் பரிவி னருளுண்டு வேற்படை மொய்ம்புமுண்டே. (௭௧)

மொய்ம்பார்ந்த சூலப் படையார் முறைதவர் முன்னடையார்
கொம்பார்ந்த வெள்ளை விடையார் கொடியொரு கூற்றுடையார்
செம்பார்ந்த கங்கைச் சடையா ரிதழி செறிதொடையார்
வம்பார்ந்த பொய்கைப் புலோலிப் பசுபதி வானவரே. (௭௨)

வானவர் யாவர்க்கு மேலானை வந்த மதகரியாந்
தானவற் செற்றுரி தோலானை வெய்ய தழல்விடமுண்
டானவக் கண்டத்து நீலானைச் சின்மய மாமுருவ
மேன புலோலிப் பசுபதி யானை விரும்புநெஞ்சே. (௭௩)

விரும்புக நெஞ்சம் விளங்குக தீய வினைகெடுக
வரும்புக நன்மை யகலாத வார்வ மடையலரைப்
பொரும்புகர் மூவிலை வேலார் புலோலியம் பொற்பதிவாழ்
தரும்புக ழீசர் பசுபதி யாரரு டந்திடவே. (௭௪)

தந்தன நேரிடை தங்குபங் காளர் தகுவர்புரம்
வெந்தன மாய்வுறப் பொங்குகங் காளர் வியனமரார்
வந்தனர் போற்றுற நுங்குவெங் காளர் வரந்தருவார்
நந்தன மோங்கு புலோலிப் பசுபதி நாயகரே. (௭௫)

நாயக ரிந்தப் புலோலிப் பசுபதி நாதரன்றி
மாயக வாழ்க்கை மயக்கொழித் தாளும் வரதரெவர்
தாயக மாமெனுந் தண்ணளி யாரிவர் தாளிணைகள்
வாயக நேரத் துதித்தால் வரும்பர மானந்தமே. (௭௬)

ஆனந்தத் தாண்டவ வம்பல வாண வடியடைந்தே
னானந்தத் தாண்டவ னெண்ணு வியம னெதிர்க்கிலவன்
றானந்தத் தாண்ட வெனக்கரு ளாறு தலையிடுமுப்
பானந்தத் தாண்டவ தெய்வப் புலோலிப் பசுபதியே. (எஎ)

பசுக்குல முய்யக் கிரிகவித் தானும் பரவுபதி
சிசுக்குல நோக்கி யழச்சிவ ஞானச் சிறப்பளித்தார்
முசுக்குல மேவு பொழிற்கயி லாய முதல்வரெழில்
வசுக்குல மேவு புலோலிப் பசுபதி மன்னவரே. (எஅ)

மன்னவர் மன்னவர் சுந்தரர் நாமம் வளங்குபுகழ்த்
தென்னவ ராகிமண் ணுண் டார் புலோலித் திருநகரிற்
பன்னரு நல்லரு ளன்பர்க் குதவி பசுபதியா
முன்னவர் முன்னவ ரெல்லாரு மேத்து முழுமுதலே. (அகூ)

முழுகுறு மாறுய ரானந்த வெள்ள முழுதருள்வார்
விழுகுறு மாறடி யேற்றன்பர் வீடுற வெஃகியவர்
ஒழுகுறு மாறுயர் வேணிப் பசுபதி யுத்தமர்தாந்
தொழுகுல வன்பர்க ளுய்வான் புலோலியிற் றுன்னினரே. (அ0)

துன்னின ரேன மறிவரும் பாதர் தொழுதுதுதி
பன்னின ரேன மழித்தருள் போதர் பரமருண்
முன்னின ரேநற் புலோலிப் பசுபதி மூதருளை
யுன்னின ரேநமற் கஞ்சாம லுய்வ ருறுதியிதே. (அக)

உறுவா ரலரெனக் குற்றவ ரின்னினி யுய்வதெவன்
செறுவா ரலர்செறி தெய்வப் புலோலித் திருநகர்மேற்
றெறுவா ரலரும் பசுபதி யாரைத் தொழுதிடுவேன்
றுறுவா ரலரிரு கைக்கொண் டடிமிசைத் தூற்றிநின்றே. (அஉ)

தூற்றினர் பூமழை தொல்லடி யார்தொழு தாயர்முடி
யாற்றினர் பூம னயனறி யாத வமலரடி
போற்றினர் பூமன்னு மானவ ருய்யப் புலோலியில்வாழ்
வீற்றினர் பூமன்னு பொற்பார் பசுபதி மேலவரே. (அங)

மேல்வரு கையுரை விட்டிவின் னோர்க்கருள் வீரவிறல்
வேல்வரு கையர் முருகர்க்குத் தாதை வினைகெட வெம்
பால்வரு கைய விளங்கருள் செய்க பசுபதியே
மால்வரு கையன்பர் மன்னும் புலோலி வளரமுதே. (அச)

வளர்ந்தோங்கு பேரருள் வள்ளா லரிய மறைமுதலே
யுளர்ந்தோங்கு கீத முறுதேன் விருந்தங் குவந்தருந்தக்
கிளர்ந்தோங்கு சோலைப் புளோலிப் பசுபதி கேளலராற்
றளர்ந்தோங் குறைவு பயபய ஞேவு தவிர்த்தருளே. (அரு)

தவிரா விடரைத் தணியார் தலைவர் தனித்தனன்யான்
கவிராசர் போற்று புளோலிப் பசுபதி கண்ணுறுதலை
யவிரா தாவி னடையாரி ஞாயர் வாருதனிக்
குவிரா குருகீ ரிரங்கீ ரவர்க்கிது கூறுவிரே. (அசு)

கூறுவ தென்ன பசுபதி யீசர் குறைமதியம்
வீறுவ தென்ன வணிந்தார் புளோலி விரும்பியுளர்
மாறுவ தென்ன குறைமதி தேங்க மலர்த்துவராற்
றேறுவ தென்னக மிங்கிவர் மேற்கவி செப்புதற்கே. (அஎ)

செப்ப விரும்புவ தீசர் புளோலித் திருப்பதியார்
ஒப்ப விரும்ப வொருவ ரிலாத வொருவர்வினை
தப்ப விரும்பிய வன்பர்க் கருளுந் தலைவருயிர்
பப்ப விரும்பு பசுபதி நாதர்தம் பல்புகழே. (அஅ)

பல்லினஞ் சிந்தப் புடைத்தா ரிரவியைப் பாவலர்க
ணல்லினஞ் சிக்கைக சிந்திசைத் தேத்துறு நம்பரிரு
ளல்லினஞ் சிந்துக ளச்சடை யாரடை யாதவர்தஞ்
சொல்லினஞ் சிந்தனைக் கெய்தார் பசுபதி சோதியரே. (அகூ)

சோதி சுதந்த்ர சுயம்பிர காச சுகுணவுமை
பாதி சுதந்த்ர மிலாதேன் புளோலிப் பசுபதியே
யோதி சுதந்த்ரநல் லோதிய ருய்வகை போற்றுசுக
நீதி சுதந்த்ரித மில்லருள் செய்தி திருமலனே. (கூ0)

திருமலர் நித்தர் நிராமயர் நீதர் நிரந்தரநீ
டருமலர் தங்கு புளோலிப் பதிக்கட் டனிபிறைவர்
கருமலர் பல்லுயிர் காதலி னைத்தக் கருணைசெய்வர்
திருமலர் பாதர் பசுபதி நாதர் திருத்தகவே. (கூக)

திருத்திகழ் மார்பனம் மாயனுஞ் சேவடி தேடியுடல்
வருத்தியுங் காண்கில னன்பின்மை யோபய லோமறலோ
கருத்திக வாமைநங் கண்ணெதிர் நின்ற கருணையனோ
மருத்திகழ் சோலைப் புளோலிப் பசுபதி வள்ளலையே. (கூஉ)

வள்ளலென் பார்பல ரிங்குளர் வித்தம் வழங்கிடுவார்
தள்ளலென் பாற்பணி பூண்டார் புலோலியிற் றங்கிறைவர்
உள்ளலென் ஞனு மடிதொழு வாருக் குகந்தளிப்பார்
விள்ளலென் மீதும் பசுபதி யீசர் விரும்புவரே. (௯௩)

விரும்பிய காதலி காதல ருள்ளன்பு மேவியுறச்
சுரும்பியல் சோலைப் புலோலியின் மேவு சுபவாதர்
அரும்பிய னேர்மொழிப் பர்வத வர்த்தனி காந்தரு
ளரும்பிய வீசர் பசுபதி யாரரு ளாருகவே. (௯௪)

ஆகுகைத் தார்நன் மயிலுகைத் தார்வைய மன்றுகைத்தார்
நாகிள ஞாளி யுகைத்தார் முதலோர் நயந்திருப்பப்
பாகுகைத் தாரு மொழியுமை யோடு பசுபதியார்
வாகுகைத் தார்பொற் புலோலியில் வாழ்வு மகிழ்வமே. (௯௫)

வாரு வலர்புகழ் வள்ள லயனெடு மான்முதலோர்
பாரு வலரன்பர் போற்று புலோலிப் பசுபதியா
தூரு வலர்சொல வைய மெடுத்த துலகுயவே
திரு வலர்சொரிந் தேத்தவந் தெய்துந் திடசித்தியே. (௯௬)

சித்தியு மாகுஞ் சிறப்புக்க ளாகுநற் செல்வமுமாம்
புத்தியு மாகுநன் முத்தியு மாகும் புகருகியோ
டத்தியு மாமென் றுகந்த புலோலி யருமருந்து
சத்தியு மாபதி சம்பு பசுபதி தாதருக்கே. (௯௭)

தாதரெங் கேயெவர் வேண்டினுந் தந்தரு டன்வபர
போதரெங் கேதகு மென்றே புலோலி புகுந்தருள்செய்
நாதரெங் கேயு நிறைந்தார் பசுபதி நம்பர்பெரு
நீதரெங் கேயும் பொழியருள் போற்பொழி நீர்முகிலே. (௯௮)

நீர்வேண்டு செய்ய சடையாய் புலோலியி னின்றருளிப்
பார்வேண்டு பல்லுயிர் பாலித் தருளும் பசுபதியே
பேர்வேண்டு மென்றும் புகழ்வேண்டு மென்றும் பிரியமுறே
னேர்வேண்டு நின்னரு ளேபெற வேண்டுவ னித்தமுமே. (௯௯)

நித்தா நிரந்தரம் யாவெனென்று வேண்டுவ னின்னிடத்தே
யத்தா பசுபதி யையா புலோலியிவ் வாலயத்தே
மெத்தா ரொளிகொள் கதிரு மதியும் விளங்களவு
மித்தா ரணியினிற் சைவமிக் கோங்க வெழுந்தருளே. (க00)

பசுபதீசுரரந்தாதி
முற்றிற்று.

பருவதவர்த்தனியம்மைதுதி.

சருவ சுரேச பசுபதி தேவருட் சத்தியென
மருவி யடியவ ருய்யப் புலோலியில் வாழ்ந்தருள்செய்
பருவத வர்த்தனி நாமநற் றேவிநின் பாதமலர்
வருமுறை யன்பி னினைவேற்கு மெய்ச்சுக வாழ்வருளே.